

முதலமைச்சர் அவர்கள், புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், சேந்தன்குடி ஊராட்சியைச் சேர்ந்த வாகன விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்து, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியுதவி வழங்கிட உத்தரவிட்டதைத் தொடர்ந்து, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில் 27.09.2025 அன்று திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், சேந்தன்குடி ஊராட்சியைச் சேர்ந்த உயிரிழந்தவரின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியுதவித் தொகைக்கான காசோலையினை வாரிசுதாரரிடம் வழங்கினார்.




சேலம் மாவட்டம், பெரியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பொது சுகாதார மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையின் 4வது சர்வதேச பொது சுகாதார மாநாடு நிறைவு விழாவில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாநாடு சிறப்பு மலர்களை வெளியிட்டார்கள். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், டி.எம்.செல்வகணபதி எம்.பி, தே.மலையரசன் எம்.பி, மேயர் ஆ.இராமச்சந்திரன், இரா.அருள் எம்.எல்.ஏ., மேட்டூர் எஸ்.சதாசிவம் எம்.எல்.ஏ., மருத்துவத்துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

### இருமொழிக் கொள்கை படித்த

# தமிழர்கள் உலகம் முழுதும் பல துறைகளில் சாதித்து வருகிறார்கள்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி பேச்சு!




திருச்சி. செப்.30-

திருச்சியில் உள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில், திருச்சி மண்டல அளவில் அறிவுசார் சொத்துரிமை சார்ந்த தொழில்முனைவோர் (iTNT) மையத்தின் துவக்க விழா நடைபெற்றது. பள்ளிக்கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி, தொழில்நுட்ப துறை அமைச்சர் பி.டி.பழனி வேல் தியாகராஜன் பங்கேற்றனர். அதில்,பள்ளிக்கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசுகையில் ...

மூன்றாவது மொழியை கற்று கொள்ள வேண்டும் என ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் மீண்டும் கூறுகிறார்.

தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தமிழ்நாடு வளர்ந்துள்ளது. தமிழ் எங்களது அடையாளம். ஆங்கிலம் எங்களுக்கான இணைப்பு மொழி. இரு மொழி கொள்கை மூலம் தமிழர்கள் உலகம் முழுவதும் பரந்து விரிந்து பல்வேறு துறைகளில் சாதித்து வருகிறார்கள். இங்கு படித்தவர் அமெரிக்காவின் தகவல் தொழில் நுட்ப துறையின் முதன்மை அதிகாரியாக பணியாற்றி வருகிறார்.

அரசின் நிதியை முறையாக பயன்படுத்தி, தமிழ்நாடு திறன்வாய்ந்த மாநிலமாக இருக்க இரு மொழி கொள்கை தான் காரணம். அது ஒன்றிய அரசுக்கும் தெரியும். தெரிந்திருந்த போதும் வீண் வாதத்திற்காக நம் மீது ஏதாவது ஒன்றை திணிக்கிறார்கள்.

சென்னைக்கு அடுத்தபடியாக திருச்சியில் முதல்முறையாக எனது தொகுதியில் இந்த மையம் துவங்கப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். அனைவருக்கும் சமமான வாய்ப்புகளையும், அனைவருக்குமான வளர்ச்சியையும் ஏற்படுத்திக்கொடுக்கிறோம்.

படித்த மாணவர்கள் அறிவுசார் சொத்துரிமை மையத்தை முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

தொழில்நுட்ப துறை அமைச்சர் பி.டி.பழனிவேல் தியாகராஜன் பேசுகையில் ...

நான் மதுரையை சேர்ந்தவன். அதேசமயம் நான் திருச்சியில் உள்ள தேசிய தொழில்நுட்பக் கழகத்தில் பயின்றவன்.

அந்த நன்றி கடனுக்காக, சென்னைக்கு அடுத்தபடியாக மண்டல அளவிலான அறிவுசார் சொத்துரிமை சார்ந்த தொழில்முனைவோர் (iTNT) மையத்தை திருச்சியில் துவக்கி வைத்துள்ளேன். இதனை தொடர்ந்து மதுரையிலும் தொடங்க இருக்கிறோம் என்று பேசினார்.

அறிவுசார் சொத்துரிமை சார்ந்த தொழில்முனைவோர் (iTNT) மையத்தின் மூலமாக, தொழில்முனைவோர் ஊக்குவிப்பு, நிதி உதவி, கண்டுபடிப்பு, உற்பத்தி பொருட்கள் சந்தைப் படுத்தல், வணிகமயமாக்கல், பொருள்கள் வடிவமைப்பு, அறிவுசார் சொத்து பாதுகாப்பு, தொழில்நுட்ப பறிமாற்றம், கூட்டுஉழைப்பு, இயக்கம், தயாரிப்பு யோசனை ஆகியவற்றை பெறமுடியும்.

### கரூர் த.வெ.க. பிரச்சாரக் கூட்டத்தில் சிக்கியவர்கள்

# நாமக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சை!

## அமைச்சர் – மருத்துவர் மா.மதிவேந்தன் சந்தித்து ஆறுதல்!

நாமக்கல், செப். 30–

கடந்த சனிக்கிழமை அன்று கரூர் மாவட்டத்தில் த.வெ.க. தலைவர் நடிகர் விஜயின் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. பிரச்சாரத்தின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி குழந்தைகள் பெண்கள் உட்பட 41 பேர் பலியாகி உள்ளனர்.

கரூர் மாவட்டத்தில் த வெ க தலைவர் நடிகர் விஜயின் பிரச்சார கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் கரூர் நாமக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இந்நிலையில் நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் ராசிபுரம் எல்ஜசி நகர் ஸ்ரீனிவாசன் என்பவருடைய மகள் பிரகதீஸ்வரி (வயது 22) மற்றும் நாமக்கல் 2வது வார்டு அன்பு நகரைச் சேர்ந்த ஆறுமுகம் (வயது 60) ஆகியோரை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் சந்தித்து ஆறுதல் கூறினார். இந்நிகழ்ச்சியின் போது நாமக்கல் மாவட்ட ஆட்சியர் துர்கா மூர்த்தி மற்றும் மருத்துவர்கள் உடன் இருந்தனர்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் வருவாய்த்துறை மற்றும் "உங்களுடன் ஸ்டாலின் திட்டம் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் கலந்து கொண்டனர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே, மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) மகாராஜ், (நிலம்) மலர், வருவாய் கோட்டாட்சியர்கள் ஃபெலிக்ஸ் ராஜா (தாராபுரம்), சிவபிரகாஷ் (திருப்பூர்) மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உள்ளனர்.



கரூர் மாவட்டத்தில் த.வெ.க. தலைவர் நடிகர் விஜயின் பிரச்சார கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் கரூர் நாமக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் ராசிபுரம் எல்.ஐ.சி. நகர் ஸ்ரீனிவாசன் என்பவருடைய மகள் பிரகதீஸ்வரி (வயது 22) மற்றும் நாமக்கல் 2வது வார்டு அன்பு நகரைச் சேர்ந்த ஆறுமுகம் (வயது 60) ஆகியோரை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் சந்தித்து ஆறுதல் கூறினார். இந்நிகழ்ச்சியின் போது நாமக்கல் மாவட்ட ஆட்சியர் துர்கா மூர்த்தி மற்றும் மருத்துவர்கள் உடன் இருந்தனர்.

# ஏழை, எளிய மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி வருகிறார் முதல்வர்!

## கீரமங்கலத்தில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேட்டி!



புதுக்கோட்டை. செப்.30–

புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலம் பேரூராட்சி, மாரியம்மன்கோவில் திருமண மண்டபத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட சிறப்பு முகாமில், பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் (24.09.2025) அன்று பொதுமக்களிடம் விண்ணப்பங்களை பெற்று கொண்டு, விவரங்களை கேட்டறிந்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பின்னர், பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிடும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொண்டு வருகிறார்கள். அந்தவகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள கடைகோடி மக்கள், அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள்/ திட்டங்களை, அவர்களின் இல்லங்களுக்கே சென்று வழங்கும், "உங்களுடன் ஸ்டாலின்" என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்கள். அதன்படி கீரமங்கலம் பேரூராட்சி, மாரியம்மன்கோவில் திருமண மண்டபத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட சிறப்பு முகாமில் கலந்து கொண்டு பொதுமக்களிடம் விண்ணப்பங் களை பெற்று கொண்டு, விவரங்களை கேட்டறிந்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

"உங்களுடன் ஸ்டா லின்" திட்டத்தின் கீழான, முகாம்களில் நகர்ப்புறப் பகுதிகளில் 13 அரசுத் துறைகளின் 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 அரசுத் துறைகளின் 46 சேவைகளும் வழங்கப்படும். இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்களின் மீது, உடனடியாகத் தீர்வு கிடைக்கக்கூடிய இனங்களில் உடனடியாகத் தீர்வு காணப்படும். பிற இனங்களில் அதிகபட்சமாக 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும். அதன்படி, கீரமங்கலம் பேரூராட்சி, மாரியம்மன் கோவில் திருமண மண்டபத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட சிறப்பு முகாமில் கலந்து கொண்டு, மக்களிடம் விண்ணப்பங்களை பெற்று கொண்டு, விவரங்கள் கேட்டறிந்தார்.

எனவே, தமிழக அரசின் மூலம் பொதுமக்களின் நலனிற்காக செயல்படுத்தப்படும் இது போன்ற திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்தி, தங்களது கோரிக்கைகளை நிறை வேற்றிக் கொள்ள வேண்டும் எனவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

முன்னதாக பிற்படுத்தப் பட்டோர் சிவ.வீ.மெய்யநாதன் திருவரங்குளம் கே.ராசியமங்களம் ஊராட்சியில் புதிதாக கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினை திறந்து வைத்தார்.

மேலும், திருநாளூர் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.8.5 லட்சம் மதிப்பீட்டில் திருநாளூர் தெற்கு டாக்டர் அம்பேத்கர் நகர் ஸ்ரீசொக்கன் சொக்காயி அம்மன்கோவில் அருகில் கட்டப்படவுள்ள புதிய கலையரங்கம் கட்டுமான பணி, கொத்தமங்களம் ஊராட்சியில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.21.92 லட்சம் மதிப்பீட்டில் பளுவான் குடியிருப்பு சாலையை தார்ச் சாலையாக அமைக்கும் பணி, ரூ.56.36 லட்சம் மதிப்பீட்டில் கூலாட்சிக் கொள்ளை சாலையை தார்ச் சாலையாக அமைக்கும் பணி, ரூ.58.36 லட்சம் மதிப்பீட்டில் சுண்டாங்கி வலசை சாலையை தார்சாலையாக அமைக்கும் பணி, நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.49.53 லட்சம் மதிப்பீட்டில் கொத்தமங்களம், குளமங்கலம், திருநாளூர் சாலையை தார்ச் சாலையாக அமைக்கும் பணி, மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.16.45 லட்சம் மதிப்பீட்டில் வாடிமாநகரில் புதிதாக கட்டப்படவுள்ள அங்கன்வாடி கட்டடம் கட்டுமான பணி என ரூ.2.11 கோடி மதிப்பிலான புதிய பல்வேறு பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

மேலும், பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர், ஆலங்குடி தாலுகா, கீழாத்தூர் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில், 100 மாணவியர்கள் தங்கி கல்வி பயிலும் வகையில் மிகப்பிற்படுத்தப் ப்பட்டோர் நல புதிய சமூக நீதி கல்லூரி மாணவியர் விடுதியினை திறந்து வைத்து, மாணவிகளுக்கு விடுதியில் தங்குவதற்கான அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்வுகளில், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜி.அமீர் பாஷா, பேரூராட்சி தலைவர் கே.சி.சிவக்குமார், பேரூராட்சி செயல் அலுவலர் அ.சுந்தர ராஜன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முத்து ராமன், ரமேஷ், சுப. சண்முகநாதன், கே.பி.கே.டி.தங்கமணி, கே.எஸ்.ரவி, குமரேசன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் சென்னை முகாம் அலுவலகத்தில், 27.09.2025 அன்று மொரிஷியஸ் நாட்டின் வெளியுறவுத் துறை துணை அமைச்சர் நரசிங்கன் ஹம்பிராஜனை மரியாதை நிமித்தமாக சந்தித்துப் பேசினார். உடன் முன்னாள் எம்.பி. எம்.எம்.அப்துல்லா உள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மடுவை அ.துரை
### செப்டம்பர் 30 (2020)



தனது இளமைப் பருவம் தொட்டே கழகப் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வந்தவர்.

தென்சென்னை மாவட்டம், சைதை பகுதிக் கழகச் செயலாளராகவும், பகுதி அவைத்தலைவராகவும் பொறுப்பு வகித்து, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களை முன்னெடுத்து நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**